கொண்டு அதற்கு பிறகு வாதாடுவது நல்லது. ஆதாரம் இல்லாமல் புழுதி வாரித் தூற்றிவிட்டுப் போகக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தாங்கள் தக்க ஆதாரங்களோடு பேச வேண்டும். ஆதாரத்தைக் கொண்டுவந்தால் விவாதத்திற்கு ஏற்பாடு செய்யலாம். இப்போது இப்பிரச்சினையை முடித்துவிட்டு ஆளுநர் உரைக்குச் செல்லலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் எங்கள் தரப்பில் பல்வேறுவிதமான மாறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும்கூட உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் வாங்கித் தந்து விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். தமிழகத்தின் உணவு பிரச்சினை சம்பந்தமாக இது இருப்பதால் இதற்கு ஆவன செய்ய வேண்டும். நான் சொன்ன பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் திரு. எஸ். டி. எஸ். அவர்கள் சொன்ன கருத்துக்களை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆதாரத்தை வைத்து நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன்.

3. அறிவிப்பு.

எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.